சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001.

தேதி: 17.03.2026.

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | **107/2025** |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா- 3 |
| சாட்சியின் பெயர் | : | சின்னப்பன் |
| கணவர் பெயர் | : | ஆரோக்கியம் |
| கிராமம் | : | கொட்டூர் |
| தாலுக்கா | : | நன்னிலம் |
| தொழில் | : | விவசாயம் |
| வயது | : | 70 |

2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 17 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் பலகை எழுத்தர் நிலை-I ஆக பணிபுரியும் திருமதி.A.லதா அவர்களால் இந்த சாட்சிக்கு 1969-ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

3 முதல் 6 மற்றும் 8 எதிரிகள் ஆஜர். 1-ம் எதிரி வேறு ஒரு வழக்கில் சிறையில் உள்ள காரணத்தினால் பி.டி. வாரண்ட் மூலம் ஆஜர்படுத்தப்பட்டுள்ளார். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். தற்போது நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள ஆறு எதிரிகளை எனக்கு தெரியும். இந்த நீதிமன்றத்தில் வருகைபுரிந்துள்ள ஆஜர் எதிரிகள் எனது ஊருக்கு அருகாமையில் உள்ள தண்டந்தோப்பு கிராமத்தை சேர்ந்தவர்கள். எதிரிகள் தேவர் சமூகத்தை சேர்ந்தவர்கள் ஆவார்கள். இவ்வழக்கு சம்பவத்தில் இறந்துபோன நாவலன் என்பவரை எனக்கு தெரியும். அவர் எனது ஊருக்கு அருகாமையில் உள்ள திருமியச்சூர் கிராமத்தை சேர்ந்தவர் ஆவார். அவர் இந்து பறையர் என்ற சமூகத்தை சேர்ந்தவர் ஆவார். கடந்த 19.01.2011-ம் தேதியன்று காலை 06.00 மணிக்கு விவசாய வேலை செய்வதற்காக வாரக்குப்பம் என்ற கிராமத்திற்கு சென்றேன். நானும், கொட்டூர் மெயின்ரோட்டை சேர்ந்த பெரியசாமி என்பவரும் சென்றிருந்தோம். வேலையை முடித்துவிட்டு இரவு 07.30 மணியளவில் வீட்டிற்கு திரும்பினோம். அவ்வாறு திரும்பி வந்துக்கொண்டிருக்கும்போது கீழமாங்குடி என்ற இடத்தின் அருகாமையில் தர்மன் என்பவரது வீட்டிற்கு அருகில் வந்து கொண்டிருக்கும் போது எதிர் திசையில் சி.பி.ஐ.எம் கட்சியை சேர்ந்த நாவலன் என்பவர் ஓடிவந்தார். அங்கு சங்கர் என்பவரது வீடு இருந்தது அந்த வீட்டிற்குள் நுழைந்தார். அவர் பின்னால் ஆறு நபர்கள் பின் தொடர்ந்து கையில் வீச்சருவாளுடன் சென்றனர். அந்த ஆறு பேர் காளீஸ்வரன் (1-ம் எதிரி), பிரகாஷ் (2 ம் எதிரி), ஜீவா -(3 ம் எதிரி), ராமன் (4 ம் எதிரி), பச்சைப்பிள்ளை (5 ம் எதிரி), பரதன் (6 ம் எதிரி) ஆவார்கள். சங்கர் வீட்டிற்குள் நுழைந்த சிறிது நேரத்தில் மேற்படி 6 நபர்களும் அருவாளுடன் வெளியே வந்தார்கள். மெயின்ரோட்டிற்கு அருகாமையில் இருசக்கர வாகனம் இரண்டு இருந்தது. ஒவ்வொரு வண்டியிலும் மூன்று நபர்கள் வீதம் இரண்டு சக்கர வாகனத்தில் கிழக்கே காரைக்கால் பக்கம் சென்றார்கள். நான் உள்ளே சென்று பார்த்தேன் அப்போது என்னுடன்

பெரியசாமி என்பவரும் உள்ளே வந்தார். பிச்சையன், ராஜா ஆகியோரும் வந்தார்கள். உள்ளே நாவலன் என்பவர் வெட்டுக்காயத்துடன் மூளை சிதறி இறந்து கிடந்தார். நான் வெளியே வந்து பார்த்தபோது ராஜா தலையில் ரத்தம் கசிந்திருந்தது. வெளியே வந்து பார்த்ததில் மின்கம்பம் அருகே ஒரு எரிகுண்டு கிடந்தது. நான் இரவு 08.00 மணிவரையில் அங்கே இருந்தேன். என்னுடன் வந்த பெரியசாமி என்பவர் என்னுடன் இருந்தேன். பின்னர் 08.00 மணிக்கு மேல் கிளம்பி சென்றுவிட்டோம். மறுநாள் திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு சென்றிருந்தோம். அங்கு நன்னிலம் காவல்துணை கண்காணிப்பாளர் அவர்கள் வந்திருந்தார் அவரிடம் நடந்ததை எல்லாம் நான் சொன்னேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**: இல்லை.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.03.17 18:35:35 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.